4. அறிவிப்புகள்.

(1) பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: 1975-ஆம் ஆண்டு இந்திய முத்திரைத் தாள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1975), தமிழ் நாடு 1975-ஆம் ஆண்டு, சீட்டு நிதிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1975) பேரவையால் நிறைவேற்றப்பட்டு இவை அரசியல் அமைப்புச் சட்டப்படி பணச் சட்ட முன்வடிவுகள் என பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு, இம் மேலவையின் பரிந்துரைக்காக பேரவைத் தலைவரால் அனுப்பப்பட்டுள்ளது.

பேரவையால் நிறைவேற்றப்பட்டு, இம் மேலவையின் ஒப்புதலுக்காக கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகள் பேரவைத் தலைவரால் அனுப்பப்பட்டுள்ளன என்பதை அவைக்கு அறிவிக்கின்றேன்:—

(1) 1975-ஆம் ஆண்டு, சென்னை மாநகரக் காவல் துறை (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1975)

(2) தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1975).

(3) 1975-ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1975).

5. கவன ஈர்ப்பு.

வறட்சி நிவாரணப் பணி நிலை, மைய அரசிடமிருந்து பெறும் உதவித் தொகையின் அளவு, தன்மை குறித்து

திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

" இம்மாநிலத்தில் நடைபெறும் வறட்சி நிவாரணப் பணியின் தற்போதைய நிலை, மத்திய அரசிடமிருந்து இதுவரை பெற்றுள்ள உதவித் தொகையின் அளவு, மேற்கொண்டு வழங்குவதாக உறுதி கூறப்பட்டுள்ள உதவித் தொகையின் அளவு, மைய அரசு வழங்கும் அந்த உதவித் தொகை மானியமாகக் கருதப்படுமா அல்லது ஐந்தாண்டுத் திட்ட நிதியுதவி வகையில் கணக்கு வைத்துக் கொள்ளப்படுமா, அவ்வாறு ஐந்தாண்டுத் திட்டக் கணக்கில் சேர்த்துக் கொள்வதென்பது நடப்பு ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலா அல்லது அடுத்து வரும் ஐந்தாண்டுத் திட்டக் காலங்களிலா என்பது குறித்து ".